ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1656/31 - 2010 ජූනි 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.03
*1656/31 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : வெலி/இ5/காஎ/20.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

ஊவா மாகாணம், பதுள்ளை மாவட்டத்தில், வெலிமட பிரதேச செயலாளர் பிரிவில், உடபலாத கோரளை சிறு பிரிவில், ஹரக்கமகந்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2009.08.17 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. எப். எஸ். பி. பி. 81, தாள் 3, பிற்சேர்க்கை 3 இல் துண்டு இல. 40 - 45 வரையான 0.0389 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஆறு (6) காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

01. துண்டு இல. 40
காணியின் பெயர் : கொரந்திஹெல பதன, பம்பரகஹபொக்கே பதன மற்றும் ஹக்கல பதன ; விபரம் : வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு (அத்துமீறிக் குடியிருப்பவர் : ஏ. ஆர். ஜோன் சிஞ்ஞோ, ரேந்தபொல, பொரகஸ்) ; விஸ்தீரணம் : 0.0058 ஹெக்டயார்.

02. துண்டு இல. 41
காணியின் பெயர் : கொரந்திஹெல பதன, பம்பரகஹபொக்கே பதன மற்றும் ஹக்கல பதன ; விபரம் : வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு (அத்துமீறிக் குடியிருப்பவர் : ஏ. ஆர். ஜோன் சிஞ்ஞோ, ரேந்தபொல, பொரகஸ்) ; விஸ்தீரணம் : 0.0145 ஹெக்டயார்.

03. துண்டு இல. 42
காணியின் பெயர் : கொரந்திஹெல பதன, பம்பரகஹபொக்கே பதன மற்றும் ஹக்கல பதன ; விபரம் : வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு (அத்துமீறிக் குடியிருப்பவர் : கே. டபிள்யு. எஸ். ஜயதாச, ரேந்தபொல, பொரகஸ்) ; விஸ்தீரணம் : 0.0152 ஹெக்டயார்.

04. துண்டு இல. 43
காணியின் பெயர் : தெரியவில்லை ; விபரம் : வீதி (வீ. அ. அ. ச.) ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0004 ஹெக்டயார்.

05. துண்டு இல. 44
காணியின் பெயர் : தெரியவில்லை ; விபரம் : வீதி (வீ. அ. அ. ச.) ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0007 ஹெக்டயார்.

06. துண்டு இல. 45
காணியின் பெயர் : தெரியவில்லை ; விபரம் : வீதி (வீ. அ. அ. ச.) ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0023 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 யூன் மாதம் 14 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு வெலிமட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.06.07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எஸ். பீ. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
வெலிமட.

பிரதேச செயலகம்,
வெலிமட,
2010.05.14.

06 - 333

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.